## பன்னாட்டுக் கருத்தரங்கம்

## INTERNATIONAL CONFERENCE

## தமிழ் இலக்கியப்பதிவுகளில் பெண் வன்கொடுமைகள்

**06, 07 திசம்பர், 2018.**

பெயர் : ______________________________

கல்வித்தகுதி : ______________________________

பணிபுரியும் /பயிலும் நிறுவன முகவரி : ______________________________

______________________________

______________________________

தொடர்பு முகவரி ______________________________

______________________________

______________________________

அலைபேசி எண் ______________________________

கட்டுரைத் தலைப்பு ______________________________

______________________________

______________________________

பணம் செலுத்தும் முறை : தொகை வரைவோலை

தொகை ______________ நாள் ______________

வரைவோலை ______________________________

வங்கி ______________ நாள் ______________

______________________________

நான் ______________________________

______________________________ என்ற தலைப்பில் கட்டுரை வழங்க இசைகிறேன். இக்கட்டுரை என் சொந்த முயற்சியில் உருவானது என உறுதியளிக்கிறேன்.

இடம் :

கையொப்பம்

நாள்:

(இப்படிவத்தை நகல் எடுத்தும் பயன்படுத்தலாம்)

## கருத்தரங்கக் குழுக்கள்

### புரவலர்கள்

**அருள்முனைவர் ஞா. லெயோனார்டு சே.ச**
அதிபர், தூய வளனார் கல்வி நிறுவனங்கள்

**அருள்முனைவர் அந்தோணி பாப்புராஜ் சே.ச**
செயலர், தூய வளனார் கல்லூரி

**அருள்முனைவர் ம. ஆரோக்கியசாமி சேவியர் சே.ச**
முதல்வர், தூய வளனார் கல்லூரி

| | |
|---|---|
| அமைப்பாளர் | : முனைவர் பி. செல்வக்குமாரன், தமிழாய்வுத்துறைத்தலைவர். |
| ஒருங்கிணைப்பாளர் | : பேரா. இ. சூசை |
| கருத்தரங்கச் செயலர் | : முனைவர் ஆ. இராஜாத்தி |
| இணைச்செயலர் | : முனைவர் சி. ஆரோக்கிய தனராஜ் |
| பொருளர் | : முனைவர் ஆ. ஜோசப் சகாயராஜ் |
| இணைப்பொருளர் | : முனைவர் இரா. முரளிகிருட்டிணன் |
| பதிப்புக்குழு | : முனைவர் ஞா. பெஸ்கி<br>முனைவர் செ. கென்னடி<br>முனைவர் ஜோ. செல்வக்குமார் |
| அமர்வு ஏற்பாடு | : முனைவர் ஆ. ஜோசப் சகாயராஜ்<br>முனைவர் டே. வில்சன்<br>முனைவர் சு. சீனிவாசன் |
| பதிவுக்குழு | : முனைவர் சி. ஷகிலாபானு<br>பேரா. சி. பாக்கியசெல்வரதி<br>பேரா. ஆ. அடைக்கலராஜ் |
| உணவுக்குழு | : முனைவர் பொன் புஷ்பராஜ்<br>முனைவர் ரெ. நல்லமுத்து<br>பேரா. தே. இன்பென்ட் ஜீசஸ் ஜெபர்சன்<br>பேரா. லூ. சகாய டென்னிஸ் சரண்பாபு |
| விருந்தோம்பல் | : முனைவர் ஜா.பெஞ்சமின் ஆரோன் டைட்டஸ்<br>முனைவர் சு. அ. அன்னையப்பன்<br>பேரா. கா. ஜான்கென்னடி |
| மேடைப் பொறுப்பு | : முனைவர் ஆ. மரியதனபால்<br>பேரா. டே. எட்வின் சார்லஸ் |
| வரவேற்புக்குழு | : முனைவர் ம. தனலெட்சுமி |
| விளம்பரம் மக்கள் தொடர்பு | : முனைவர் த. டான்ஸ்டோனி<br>பேரா. த. அருள்பிரகாசம் |

### தொடர்பு முகவரி

**முனைவர் ஆ. இராஜாத்தி**
கருத்தரங்கச் செயலர், தமிழாய்வுத்துறை
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-2
தொலைபேசி : 0431-4226401; அலைபேசி: 96263-68272, 94439-05326

## பன்னாட்டுக் கருத்தரங்கம்

## INTERNATIONAL SEMINAR

## தமிழ் இலக்கியப்பதிவுகளில் பெண் வன்கொடுமைகள்

## (HARASSMENT OF WOMEN AS REGISTERED IN TAMIL LITERATURE)

***06, 07 திசம்பர், 2018.***

## அறிவிப்பும் அழைப்பும்

### தமிழாய்வுத்துறை

**தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி**
(‘A’ தரத்தகுதியும் செயல்திறன் ஆற்றல் வளத் தனித்தகுதியும் சிறப்புத் தொன்மைத் தகுதியும் பெற்றது)
**திருச்சிராப்பள்ளி-620 002**

**St. Joseph's College (Autonomous)**
Special Heritage Status Awarded by UGC
Accredited at 'A' Grade (3rd Cycle) by NAAC
College with Potential for Excellence by UGC
DBT-STAR & DST – FIST Sponsored College
**TIRUCHIRAPPALLI - 620 002.**

பேரன்புடையீர் வணக்கம்,

இந்தியத் திருநாட்டில் தமிழகத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ள திருச்சிராப்பள்ளியில் இருநூற்றாண்டு காலமாகக் கல்விப்பணியாற்றி வருகின்ற எம் கல்லூரி **'உண்மைக்கும் நன்மைக்கும்'** என்னும் விருது வாக்கோடு, 175-வது அகவையில் கல்விச்சேவை புரிந்து வருகின்றது. தமிழக சேசு சபையினரால் நடத்தப்பெறுகின்ற இக்கல்லூரி பல்கலைக்கழக மானியக்குழுவால் ஆற்றல் வளத் தனித்தகுதியும், தேசிய தர மதிப்பீட்டுக் குழுவின் (மூன்றாம் சுற்று) 'A' தரத் தகுதியும், சிறப்புத் தொன்மைத் தகுதியும் பெற்றுள்ளது. இத்தகு பெருமைமிகு கல்லூரியில் நூல்களை வெளியிடுவதிலும், கருத்தரங்குகளை நடத்துவதிலும், முனைவர் பட்ட ஆய்வுகளை மேற்கொள்வதிலும், சிறப்புறச் செயல்படுகின்ற தமிழாய்வுத்துறை, ஆண்டுதோறும் தேவைக்கேற்ப பயனுள்ள தலைப்புகளில் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றது. இத்தகைய ஆய்வுப் போக்கினை மேலும், வளப்படுத்தும் நோக்கில், தமிழாய்வுத்துறை 'தமிழ் இலக்கியப் பதிவுகளில் பெண் வன்கொடுமைகள்' என்னும் பொருண்மையில் 06, 07 திசம்பர் 2018 ஆகிய நாள்களில் பன்னாட்டுக் கருத்தரங்கத்தை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

### கருத்தரங்கத்தின் நோக்கம்

வேதகாலம் தொடங்கி இன்றுவரை ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமன் இல்லாத நிலை தொடர்கிறது. அதனால் வலிமையான ஆண்கள் வலிமையற்ற பெண்களை வன்செயல்பாடுகளால் துன்புறுத்துகின்றனர். ஆண்களைவிடக் கீழ்நிலைக்குப் பெண்களைத் தள்ளும் இக்கட்டான சமுதாயச் செயற்பாடுகளுள் ஒன்று பெண்களுக்கு எதிரான வன்கொடுமையாகும். பெண்களுக்கும், சிறுமிகளுக்கும் எதிரான வன்கொடுமைகள் உலகெங்கும் நிகழ்ந்து வருகின்றன. உலகில் மூன்று பெண்களில் ஒருவர் தனது வாழ்நாளில் தாக்கப்பட்டோ, புணர்விற்கு வற்புறுத்தப்பட்டோ, பிற வகையில் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டோ துன்புறுத்தப்படுகின்றனர். குடும்ப வன்கொடுமைகள் பாலினத் துன்புறுத்தல், கருத்தடுப்பு முறைகளில் கட்டாயப் படுத்துதல், பெண்சிசுக்கொலை, பால்தெரிவு கருக்கலைப்பு, கௌரவக்கொலை, வரதட்சணை (கைக்கூலி) மரணம், கடத்திக் கட்டாயத் திருமணம், குழந்தை மணம், கைம்பெண் கொடுமை, போர்க்காலத்தில் பெண்களுக்கான கொடுமைகள், காவல்துறை மற்றும் அதிகார வர்க்கத்தினால் வன்கொடுமைக்கு உட்படுத்துதல், போராட்டத்தில் அடக்கு முறையைக் கையாளுதல், கட்டாயப் பாலியல் தொழில் போன்ற கொடுமைகள் நிகழ்கின்றன.

பிறப்பிற்கு முன்னும், மழலைப்பருவம், சிறுமியர், வளர்ந்த வயது வந்தோர், முதியோர் ஆகிய நிலைகளிலும் வன்கொடுமைகள் அரங்கேறுகின்றன. ஆகவே, இந்தப் பொருண்மைகளில் எழுதவும், விவாதிக்கவும் செயல்படும் போது ஓரளவிற்குப் பெண்கள் மீது நிகழ்த்தப்படும் வன்கொடுமைகளிலிருந்து மீட்டெடுப்பு செய்யலாம். இக்கருத்துக்களின் அடிப்படையில் ஆய்வுக்கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. மாதிரித் தலைப்புகள் இங்குத் தரப்பெற்றுள்ளன. தலைப்பின் பொருண்மையில் மட்டுமே கட்டுரைகள் வழங்குமாறு வேண்டுகிறோம். பெண்ணின் பெருமைகள் பற்றி எழுதும் கட்டுரைகள் ஏற்கப் பெறமாட்டாது.

கட்டுரைகள் A4 தாளில் ஐந்து பக்க அளவில் பாமினி (Bamini Font) அல்லது Unicode எழுத்துருவில் (Font Size 12; Line Space 1.5) கணினித் தட்டச்சு செய்து **tamilseminarsjc@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வுக் கட்டுரைகளை அனுப்பும் போது, நெறியாளரிடம் கையொப்பம் பெற்றுச் செம்மையாக்கம் செய்து அனுப்ப வேண்டும். கட்டுரைகள் மின்னஞ்சலில் அனுப்பியதைக் கட்டுரையாளர்கள் உறுதி செய்துகொள்ள வேண்டும்.

கட்டுரைகள் அனைத்தும் தொகுக்கப்பெற்றுக் கருத்தரங்கத் தொடக்க விழாவில் அச்சு வடிவில் நூலாக ISBN எண்ணுடன் வெளியிடப்பெறும்.

### பதிவுக்கட்டணம்

பேராளர் : ₹ 700 ஆய்வு மாணவர் : 400

பங்கேற்பாளர் : 250 அயல்நாட்டுக் கட்டுரையாளர் : $ 15

கட்டுரைக்கான கட்டணம் **'The Principal, St. Joseph's College, Payable at Tiruchirappalli-620 002.**

**கட்டுரையின் வன்படி, வரைவோலை, பதிவுப்படிவம் வந்து சேர வேண்டிய இறுதிநாள் 10.11.2018.**

### மாதிரித்தலைப்புகள்

1. தொல்காப்பியம் வரையறுக்கும் பெண் மீதான கட்டுப்பாடுகள்
2. சங்க அகஇலக்கியங்கள் சித்திரிக்கும் குடும்ப வன்முறைகள்
3. சங்கஇலக்கியம் சித்திரிக்கும் பரத்தையர் ஒழுக்கம்
4. சங்ககாலச் சமூகத்தில் கொண்டிமகளிர்
5. புறத்திணைகள் சுட்டும் பெண் வன்கொடுமைகள்
6. சிலப்பதிகாரம் காட்டும் உரைசால் பத்தினி – மறுவாசிப்பு
7. மணிமேகலை காட்டும் கணிகையர் சமூகம்
8. சீவகசிந்தாமணி எடுத்துரைக்கும் பலதார மணமுறை
9. கம்பராமாயணத்தில் வெளிப்படும் ஆணாதிக்கச் சிந்தனைகள்
10. கம்பராமாயணத்தில் சூர்ப்பனகை சந்தித்த வன்கொடுமைகள்
11. வில்லிபாரதத்தில் பாஞ்சாலி சந்தித்த ஆணாதிக்க ஒடுக்குமுறைகள்
12. தனிப்பாடல்களில் வேசியர் ஏசல்
13. நீதிநூல்கள் திணிக்கும் பெண்ணடிமைச் சிந்தனைகள்
14. பெண்கதைமாந்தர்கள் வழிப் பழங்கதைகள் கட்டமைக்கும் பெண்ணடிமைத்தனம்
15. சமயங்கள் மறுக்கும் பெண்ணின் அடையாளங்கள்
16. உலா இலக்கியங்கள் கட்டமைக்கும் காமம்
17. நாட்டுப்புறப்பாடல்களில் காணலாகும் பெண்ணடிமைச் சிந்தனைகள்
18. குறவஞ்சி இலக்கியங்கள் வெளிப்படுத்தும் பெண்களிடையேயான பாகுபாடுகள்
19. பெண்களைப் பழித்துரைக்கும் பட்டினத்தார் பாடல்கள்
20. மாதவையாவின் 'முத்து மீனாட்சி' புதினம் சித்திரிக்கும் பெண்வன்கொடுமைகள்
21. புதுமைப்பித்தனின் 'பொன்னகரம்' கேள்விக்குள்ளாக்கும் கற்புக்கோட்பாடு
22. தி.ஜானகிராமனின் 'மரப்பசு' புதினத்தில் பெண் சுதந்திரம்
23. ஜெயகாந்தனின் 'சிலநேரங்களில் சில மனிதர்கள்' கண்டிக்கும் பாலியல் வன்முறை
24. வைரமுத்துவின் கவிதைகளில் 'முதிர்கன்னிகள்' குறித்த பதிவுகள்
25. சோலைசுந்தரபெருமாளின் 'செந்நெல்' சித்திரிக்கும் பெண்தொழிலாளிகள் மீதான வர்க்க ஒடுக்குதல்கள்
26. பாமாவின் புதினங்களில் சமயங்கள் திணிக்கும் பெண் வன்கொடுமைகள்
27. சல்மாவின் 'இரண்டாம் சாமங்களின் கதை' சித்திரிக்கும் குடும்ப வன்முறைகள்
28. 'தகனம்' புதினத்தில் சுடுகாட்டுப் பெண்தொழிலாளர் சந்திக்கும் ஒடுக்குமுறைகள்
29. 'பெயரிடாத நட்சத்திரங்கள்' கவிதைத்தொகுப்பு வெளிப்படுத்தும் ஈழப்பெண் போராளிகள் மீதான ஒடுக்குமுறைகள்
30. ஈழத்துப் பெண்கவிஞர்கள் வலியுறுத்தும் பெண்ணுடல் என்னும் ஆயுதம்
31. மாலதி மைத்ரியின் கவிதைகள் முன்வைக்கும் ஆணுடல் மறுத்தல்
32. இமையத்தின் 'ஆறுமுகம்' புதினம் சித்திரிக்கும் ஆணாதிக்க வன்முறைகள்
33. லீனா மணிமேகலை கவிதைகள் கேள்விக்குள்ளாக்கும் பெண்மனவுணர்வுகள்
34. 'கலைவாணி–ஒரு பாலியல் தொழிலாளியின் கதை' என்னும் புதினம் காட்டும் ஆணாதிக்க மேலாண்மை
35. இன்குலாப்பின் மீட்டுருவாக்க நாடகங்களில் புலப்படும் பெண்களின் கலகக்குரல்கள்
36. 'சோளகர் தொட்டி' புதினம் வெளிப்படுத்தும் பழங்குடிப்பெண்கள் மீதான வன்முறைகள்
37. பெண்வன்கொடுமைகளுக்கு எதிரான தந்தை பெரியாரின் முழக்கங்கள்
38. வல்லுறவுக்கு உள்ளாக்கப்படும் பெண்குழந்தைகள்
39. பெண்கள் மீதான அமிலவீச்சுகள்
40. விளம்பரங்கள் அழித்தொழிக்கும் பெண்ஆளுமைச் சிந்தனைகள்
41. தமிழ்த்திரைப்படங்கள் சித்திரிக்கும் பெண் வன்கொடுமைகள்

**(மேற்கண்ட தலைப்புகளிலும் இவை போன்ற பிற தலைப்புகளிலும் கட்டுரைகள் அமையலாம்)**

## 'HARASSMENT OF WOMEN AS REGISTERED IN TAMIL LITERATURE'

St. Joseph's College, Tiruchirappalli is a prestigious Educational Institution, rendering its service for the past 175 years effectively, as a heritage college of Tamilnadu, with the motto of **'PRO BOND ET VERO'** (for the good and the truth). It is an autonomous institute of the society of Jesus, and has been nationally accredited at 'A' Grade (3rd Cycle) by NAAC. The P.G. & Research Department of Tamil, has been dynamic in undertaking new avenues of research through organizing international / National conferences, and seminars past 27 years. In order to commemorate, the Quartoseptcentennial (175 years) Jubilee year of the college, the department of Tamil, takes pleasure in adding a new feather to its cap by conducting an international conference entitled "Harassment of Women as registered in Tamil Literature" on 06th and 07th December 2018.

### The Objectives of the Conference

The women folk are at the receiving end of this cruel menace. It does not space toddler, infants, teenagers, adolescents, adults and old women. Thus, the best form to combat such heinous act is to articulate and narrate the experience of women through literature. The scholarly articles that revolve around the sufferings and the unjust violence meted out on women are welcome. Articles that glorify the person and works of women are not encouraged.

Essays on the above mentioned topic need to be typed in Bamini Font or Unicode (Font Size 12, Line Space 1.5) and should not exceed five pages in A4 Sheet. It is to be mailed to the following email address : **tamilseminarsjc@gmail.com**

Those M.Phil and Ph.D. Research Scholars, who write articles, are requested to obtain the signature of your respective guide and proof read the same. You are to verify and confirm the acceptance of your scholarly articles through e-mail.

All the accepted articles will be compiled and published in the form of a book with ISBN number at the inaugural ceremony of the International Conference.